1996 பிப்ரவரி 17]

(ஆ) துறையின் கட்டுப்பாட்டிற்குள் வராத திருக்கோயில்களின் விவரம் கொடுக்க இயலாது.

முற்பகல் 11.15

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்று இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய 35,477 கோவில்களுடைய சொத்துக்கள் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தருவார்களா? காரணம் இன்று பல கோவில்களில் இருக்கக்கூடிய சொத்துக்கள், நிலங்கள் எல்லாம் குத்தகைக்கு விடப்பட்டு அந்தக் கோவில்களுக்கு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள அனைத்துக் கோவில்களுக்கும் ஒருகால பூஜை உண்டு என்று நம்முடைய ஆளுநர் உரையில் தெரிவித்து இருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்னவென்றால், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் எத்தனை; கட்டுப்பாட்டுக்குள் வராத ஆலயங்கள் எத்தனை என்பது தான். இதைவிட்டுவிட்டு சொத்து, சுகம் எல்லாவற்றுக்கும் போகிறீர்களே? (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 35,477 கோவில்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவர்கள், இன்னும் இதைவிட பல மடங்கு அதிகமாக கட்டுப்பாட்டுக்குள் வராமல் இருக்கிற கோவில்களை எப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இருக்கிறீர்கள்? உபரி நிதியிலிருந்து எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற சோளிங்கர் கோவிலுக்கு இழுவை ரெயில் அமைக்க ஒருகோடி ரூபாய் தாங்கள் கொடுக்க முன்வருவீர்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் நடத்தும் கோவில்களில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால்தான், அதை அரசு எடுத்து நடத்த முடியும். அப்படிப் பிரச்சினை இருந்தால்தான், அந்தக் கோவிலை அரசு எடுக்கும். மற்றபடி ஒட்டுமொத்தமாக அனைத்துக் கோவில்களையும் எடுக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

56--

தளி தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*35755—திரு. மு. வெங்கடராம ரெட்டி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காரகொண்டபள்ளி, போடிசிபள்ளி, இருதாளம், கருஉத்தனபள்ளி, பொம்மதத்தனூர், காளி நாயகனபள்ளி, கோவிந்தபள்ளி, ஓசட்டி, எலசட்டி, பேளாளம் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தருமபுரி, தளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காரகொண்டபள்ளி மற்றும் 9 கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராமேஸ்வரத்திலிருந்து காணாமல் போன மீனவர்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்கள் காணாமல் போய் இருப்பது பற்றிய பிரச்சினையைப் பேரவையில் எழுப்பி, விவாதிக்க வேண்டுமென்று பேரவை விதி 56-ன் கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை திரு. ஜி. பழனிசாமி அவர்கள் என்னிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். அதேபோன்று அதே பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. ஆர். கோடிமாரி அவர்களும், திரு.இரா தாமரைக்கனி அவர்களும் அறிவிப்புகளை என்னிடத்தில் கொடுத்து இருக்கிறார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால், அவர்கள் இருவரும் கேட்டுக்கொண்ட 'ஸ்பெஷல் மென்ஷன்' பிரச்சினை என்பது இதில் வராது. இருந்தாலும் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள் என்ற தகவலைப் பேரவைக்குத் தெரிவிக்கிறேன். இது பேரவை விதி 56-ன் கீழ் பேரவையின் இதர அலுவல்களை